திராவிடநாடு

17—7—60 | வார வெளியீடு | விலை 16 காசு

சேர வருவீர்!

—[கருணானந்தம்]—

சேர வருவீரே, சேர வருவீரே
வீர ரெல்லாம் வேகமாகச் (சேர)

சேர சோழத் தென்பாண்டி நாட்டார்
தீர காவியம் தீட்டிடும் போரில் (சேர)

வாழும் வடக்கின் வஞ்சகச் செயலால்
தாழும் தெற்கினைச் சமன் செயும் போரில் (சேர)

செந்தமிழ்த் தாயின் சிறப்பினை அழிக்கும்
இந்தித் திணிப்பினை எதிர்த்திடும் போரில் (சேர)

நாட்டை மீட்டிடும் நற்பணி புரிய
வீட்டுக்கொருவர் விரைந்திடும் போரில் (சேர)

உறுதியோடும் நம் உரிமையைக் காக்கக்
குருதி சிந்திடும் ஒருபெரும் போரில் (சேர)

மானம்?

சென்ற இதழ் தொடர்ச்சி...

"சே... இந்த உலகத்தில் யாரை நம்புவது. எல்லாம் மோசடி...... எல்லாம் மோசடி......" என்றது அவர் மனம். தான் கஷ்ட நஷ்டப் பட்டுப் பெற்று வளர்த்த தன் மகளே இப்படித் தனக்கு எதிரியானுள் என்பதை எண்ணும்பொழுது எரிந்துகொண்டிருக்கும் தீயிலே யாரோ பெட்ரோலை வீசுவது போலப்பட்டது.

இனித் தான் என்ன செய்வது? தன் வாழ்வில் எல்லாம் முடிந்து விட்டதாக உணர்ந்தார். தான் யாருக்காக இத்தனை காலமும் இவ்வுலகில் வாழ்வதாக எண்ணி வந்தாரோ, அவளே இன்று அவரைவிட்டு எவ்வளவோ தூரம் போய்விட்டாள். இனி அவருக்கு அவள் எட்டாத கனிதான், இட்டாத கிளிதான். இப்பொழுது தான் அவர் தன்னுடைய முதுமையை உணர்ந்தார். இதுவரை அவரைப் பலர் முதியவர், முதியவர் என்று சொல்லக் கேட்டிருக்கிருரே தவிர, உண்மையில் இன்றுதான் அந்த முதுமையின் தன்மையை அவரால் உணர முடிந்தது.

இனித், தான்...எங்காவதுபோய் ...அல்லது... வேறு... வேறு... அவர் மனத்தின் உளைச்சலுக்கு அவரால் தாக்குப்பிடிக்கவே முடிய வில்லை.

"நாளை எப்படி வெளியில் தலை காட்டப் போகிருய்"—இந்த எண்ணம் வேறு அவரின் உள்ளத்தை அக்கு வேறு ஆணி வேருகக் கழட்டிக்கொண்டிருந்தது.

மெல்ல எழுந்தார்—நகர்ந்தார்—நடக்கமுடியவில்லை. மீண்டும் மெத்தையிலே விழுந்தார்.

"முதலாளி... முதலாளி..."

"யாரது?"

"நான்தான் சாமி" வேலைக்காரர்களில் ஒருவன் குரல்.

"என்ன...?"

"கடுதாசி..."

"ஏது?"

"சின்னம்மாவிடமிருந்து..."

"சின்னம்மாவிடமிருந்தா...?"

கடிதத்தைப் பெறவேண்டும் என்று விரைந்தார். அவரின் உள்ளுணர்வு தட்டியது. மனிதனுடைய மனத்தைப் போன்ற நண்பனும், பகைவனும் உலகில் காணக் கிடைப்பதரிது. நல்ல வேட்டாரியும் அந்த மனம்தான். ஒருவனுடைய உள்ளத்திலேயே இப்படிப் பட்ட இரண்டுவிதமான தன்மைகள் பலவும் உறங்குவதால்தான்

கரந்தை—கணேசன்

உலகம் எத்தனையோ அறிவாளர்களின் உபதேசத்திற்குப் பிறகும் உதாரியாகவே இருந்துவருகிறது.

"அந்தக் கடுதாசியைக் கொண்டு போய், அவ முகத்திலேயே வீசு"

"சரிங்க..." வேலைக்காரன் திரும்பினன்.

"டேய்... டேய்... என்னதான் எழுதியிருக்கான்னு பார்ப்போமடா"—அதே மனம் இதே சொற்களை வீசச்செய்தது. கதவைத் திறந்து கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

அறையைத்தாளிட்டுக்கொண்டு, தாளிட்ட அறையை ஒருமுறை சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு கடிதத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினர். எப்பொழுதுமே கலவரப்பட்டுவிட்ட கண்களுக்குக் கண்டதெல்லாம் பகைப் பொருளாகத்தான் காட்சியளிக்கும். ஏதாவது ஒரு சுமையை மனத்திலே கொண்டுவிட்டால், மனம் அடிக்கப் பட்ட பந்தைப்போலாகிவிடும். அங்கு இங்கு என்று அலையுமே தவிர, ஒரு இடத்தில் இருப்பதற்கு அதனுல் முடிவதில்லை.

அன்புருவான அப்பாவுக்கு!

வணக்கம் பல.

நான் இக்கடிதத்தை எழுதுகிற பொழுது உங்களை அப்பாவென்று அழைப்பதற்கு என்ன அருகதை இருக்கிறது உனக்கு, என்று கேட்கத் தோன்றும். என்ன இருந்தாலும் நீங்கள் என் அப்பா தான்......தங்க அப்பா. இல்லா விட்டால் எனக்கு மல்லிகா என்ற முத்தான பெயர் வைத்திருப்பீர்களா!

நான் தாங்கள் எதிர்பார்த்தே இராத முறையில் வழக்கில் எதிர் மாருக எனது அத்......முத்தழகு அவர்கட்குச் சாட்சியம் வழங்கியது எண்ணி ஏமாற்றமும், என் மீது எரிச்சலும் கொண்டிருப்பீர்கள். இன்னும் சற்று அதிகமாகக் கூறவேண்டுமானுல் இவளும் என் மகளா என்றுகூட எண்ணியிருப்பீர்கள்.

எனினும், எனக்கு உங்கள்மீது நம்பிக்கையிருக்கிறது; நீங்கள், நான் சொல்லப்போவதை நல்ல முறையிலே மெல்லப் படித்து சிந்தித்துப் பார்ப்பீர்களானுல், நான் செய்தது முற்றிலும் நன்றே என்று ஒத்துக்கொள்வீர்கள். அந்த நம்பிக்கையொளியின் துணை கொண்டுதான் உங்கள் மன இருளை ஒட்ட நான் இதன் மூலம் முயற்சிக்கிறேன். முயற்சி வெற்றி பெறும் என்றும் நம்புகிறேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

பத்தொன்பது

மலர் 19 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (17—7—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 1

"திராவிட நாடு" தனது பதினெட்டாண்டுகளில், பெரும் பகுதியை அழகாகவும் நல்ல முறையிலும், ஒருசில பகுதியை ஒருவாறாகவும் முடித்துக்கொண்டு பத்தொன்பதாவது ஆண்டை அடைந்துள்ளது.

பொதுவாகவே, மக்களுடைய வாழ்வில் நல்லதும் கெட்டதும், இன்பமும் துன்பமும், தொல்லையும் துயரமும் ஏற்படுவதுபோலவே, திராவிட மக்களின் நல்வாழ்வைக் காண்பதொன்றையே தனது குறிக்கோளாகக்கொண்டு பணியாற்ற முன்வந்த "திராவிட நாடு" இதழுக்கும் இடையிடையே நலிவும் மெலிவும் ஏற்பட்டதுண்டு. என்றபோதிலும் பத்தொன்பது ஆண்டை அடைந்த இளைஞன் ஒருவன், தன் விருப்பத்தைக், கடமையைக், குறிக்கோளை நிறைவேற்றுவதில் எத்துணை இடையூறுகள், தொல்லைகள் ஏற்பட்டாலும், அவற்றை எல்லாம் துச்சமாகக் கருதித் துடைத்துக்கொண்டு தன் வழியே — அறவழியே செல்வானோ, அதுபோலவே "திராவிட நாடு" இதழும் தனது பயணத்தில் ஏற்பட்ட இன்னல்களைப் பொறுத்துக்கொண்டு கடமையை ஆற்றியிருக்கிறது.

இந்தப் பதினெட்டாண்டுகளில் ஆளவந்தார்கள் இழைத்த கொடுமைகள், அரசியல் அழுக்காற்றின் காரணமாக மாற்றுக் கருத்தினர் தந்த தொல்லைகள் ஆகிய இவற்றையெல்லாம், எதையும் தாங்கும் இதயம் உண்டு என எக்காளமிட்டு அகமும் முகமும் மகிழ வெற்றிநடை போட்டு வந்திருக்கிறது.

பொதுவாக, விற்பனையாளர்களுக்கும், சிறப்பாக வாசகர்களுக்கும் கடந்த மூன்றாண்டுக் காலத்தில் ஏற்பட்ட வாட்டத்தையும் வேதனையையும் ஒருவித 'விரக்தி'யையும் போக்கத் தனது முழு ஆற்றலையும் "திராவிட நாடு" பயன்படுத்தி, "இனி முடியாது" என்ற நிலைக்கு வந்த நேரத்தில், பெற்ற அன்னை தன் பிள்ளையின் துயர்கண்டு பொறுதவளாய்த் தனக்கிருக்கும் பல தொல்லைகளையும் மறந்து, தன் பிள்ளையின் துயர் துடைத்தலே முதற்கண் செயற்பாலதொன்று என்றெண்ணச் செய்வதுபோல், பொதுவாகவே நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் நலிவைப் போக்கும் நல்ல நேரத்தின் ஒரு பகுதியை நல்கி, அனைவரையும் களிப்பூட்டும் வகையில்—சமயமறிந்து, "திராவிட நாடு" தனது பணியைத் தொட்டிருக்கிறது--இனித் துவளாதென்ற உறுதியையும் தந்திருக்கிறது.

இந்த நல்ல செய்தியோடு 'திராவிட நாடு' தனது பத்தொன்பதாவது ஆண்டைத் தொடங்கியிருக்கிறதென்பதனை . மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றாலும், வடவரின் ஏகாதிபத்தியம் அரசியல் துறையில் ஏற்றம் பெற்றுவிட்டிருக்கிற காரணத்தால், இனம், மரபு, பண்பாடு அனைத்தையும் அழித்தொழிக்கும் போக்கில், இந்தி மொழியை நம்மீது திணித்திடத் தீவிரமாக முனைந்துள்ளனர். அவர்களின் இந்தத் தகாத முனைப்பை எதிர்த்துத் தடுப்பது என நமது கழகம் முடிவெடுத்து, அதற்கான திட்டம் தீட்டி, அறப்போர் நடாத்த நாளும் குறித்துவிட்டது. அதற்கான எல்லாவற்றையும், மற்ற நமது கழக ஏடுகள்போல் 'திராவிட நாடு' இதழும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

எனவே, 'திராவிட நாடு' இதழின் வளர்ச்சியில் பங்குகொண்டு, அதன் வாழ்விலும் தாழ்விலும் தங்களையும் பிணைத்துக்கொண்டு அயராது பணிபுரிந்து வரும் நமது அச்சகத் தோழர்கள் அனைவருக்கும் நாம் நம்முடைய பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதுபோலவே, 'திராவிட நாடு' இதழுக்கு அவ்வப்போது அதன் தேவையை உணர்ந்தும், சந்தர்ப்பத்தைச் சரிவர அறிந்தும் கதைகள், கட்டுரைகள் அளித்து நமது அயர்வை நீக்கிய எழுத்தாளர்களுக்கு நமது நன்றியை உரித்தாக்கி, இனியும், இவை போன்ற உரிமையோடுகூடிய உதவியும் ஒத்துழைப்பும் நல்கி நம்மையும், எல்லாரையும் மகிழ்விக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு 'திராவிட நாடு' தனது பத்தொன்பதாவது ஆண்டைத் தொடங்குகிறது—வணக்கம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் நீங்கள் சற்று அமைதியாக ஆரவாரமில்லாமல் அன்போடு எண்ணிப் பார்க்கவேண்டும். அப்படிப்பட்ட, எண்ணிப் பார்க்கத்தக்க இதயம் தங்களிடம் இதுபோது இல்லை என்றால், இக்கடிதத்தை இதுபோது படிக்காதீர்கள். நாளை மறுநாள், ஏன்? எப்பொழுது உங்கள் இதயம் இடம் தருகிறதோ அப்பொழுது எடுத்துப் படித்துப் பார்த்துப் பரக்கச் சிந்தியுங்கள். அதுபோது நீங்களும் நிச்சயமாக என் முடிவிற்குத் தான் வருவீர்கள்.

நீங்கள் வழக்குத் தொடுத்ததே குடும்பமானம், மரியாதை......... போன்றவைகளைக் காப்பாற்றத் தான்......ஆனால் எதிலே மானம், மரியாதை இருக்கிறது, அதுவும் எந்த உருவிலே இருக்கிறது என்பதை மறந்துவிட்டீர்கள். மானம், மரியாதைதான் பிரதானம் என்று எண்ணியதிலே தவறு இருப்பதாக நான் கூறவில்லை, கூறவும் மாட்டேன், கூறுபவள் பெண்ணுமல்ல.

மானம், மரியாதை போன்றவைகள் காப்பாற்றப்பட வேண்டும், மற்றவர்கள் கண்டு மதிக்கவேண்டும் என்று எண்ணி அதற்காகச் செய்யப்படுகின்ற செயலின் முறையிலே, கருத்திலே எனக்கும் உங்களுக்கும் மாறுபாடு இருக்கிறது. அதனாலே உங்களைக் கருத்திலே கலக்கம் கொண்டவர் என்று மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவதாகக் கருதிவிடவேண்டாம். நீங்கள் மானம், மரியாதையெல்லாம் ஊரளவிலே இருந்தால் போதும் என்று, உள்ளத்தளவிலே அறிந்தோ அறியாமலோ கருதுகின்றீர்கள். நானோ ஊரளவிலே மட்டுமல்ல உண்மையான நம் வாழ்விலும் இருக்க வேண்டும் என்று கருதுகின்றேன். மரத்திற்குச் சல்லிகள் சராசரியாக ஓடியிருந்தாலும் ஆணிவேர் எத்துணை அவசியமோ அதைப்போலத்தான் வாழ்க்கையும். புறவாழ்வின் போற்றுதல்களாலே மட்டும் புனிதம் பெற்றதாக ஆகிவிடாது. அகத்திலும் அந்தப் புனிதவேர் ஆழப் பதிந்து கிடக்கவேண்டும்.

அதற்குக் காரணம் உண்டு. எனக்கும் அவருக்கும் காதல்—கடிமணம் அளவுக்கு நாங்கள் வந்துவிட்டோம். நீங்களோ ஊராருக்காக எங்களை வெட்டிப் பிரிக்கத் திட்டமிட்டீர்கள். அதன் விளைவுதான், 'திருட்டு வழக்கு நீதிமன்றத்திலே' அந்த வழக்கிலே 'மகள் தந்தைக்காற்றும் உதவி' என்று எண்ணித் தங்கட்குச் சாதகமாகவே நான் சாட்சியம் கொடுத்ததாகவே கொள்வோம். அதனால்.......அப்பா......நீங்கள் நினைக்கிறபடி ஊரை ஏமாற்றிவிட்டதாக நீங்கள் எண்ணலாம். ஆனால் ஊர்......அது உங்கள் முன்னாலே ஒத்துக்கொண்டாலும், உண்மையாக ஒத்துக்கொள்ளாது. மாறாக மறைமுகமாக மட்டரகமாகத்தான் பேசும்.

அப்படி ஊரே ஒத்துக்கொண்டாலும் உண்மையில் என் நிலை என்ன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். நானும் தங்களின் ஆசைப்படி யாராவது வேறு ஒருவரை மணந்துகொள்வதாகவே வைத்துக்கொள்ளுங்கள். அதனாலே என் மானம் உண்மையாகவே காப்பாற்றப்படுகிறதா? அல்லவே......அல்லவேயல்ல...... அதுபோதுதானே என் மானமே... உண்மையாகவே பறி போகிறது. நாம் ஊரை ஏய்க்கலாம், உற்றாரை ஏய்க்கலாம், உயர்ந்தோரை ஏய்க்கலாம், கற்றாரை ஏய்க்கலாம், மற்றோர் யாவரையும் ஏய்க்கலாம்...... ஆனால்......மனத்தை.........எந்த வழக்கைக்கொண்டு ஏய்ப்பது? அது சொல்லிக்கொண்டிருக்குமே அப்பா, 'மானங்கெட்டவள், மற்றவர்களுக்குப் பயந்து கற்பைக் கண்டபடி கெடவிட்டவள்,'! என்றெல்லாம். மனத்தை ஏய்க்க ஏதாவது வழியிருந்தால் கூறுங்கள்; ஒருவேளை முயற்சிக்கலாம்—முடிந்தால். இப்பொழுது—சொல்லுங்களப்பா......சொல்லுங்கள்.

நீங்கள் சொல்லலாம், அப்படியானால் குடும்பகவுரவம்—அது எப்பொழுதுமே கண்டவர்களின் வாய்ச்சொற்களிலே இல்லை, நம்மவர்களின் நல்ல நடத்தையிலேதான் உள்ளது. அதற்கு வேண்டுமானால் நாங்கள் இம்மியும் பிசகாமல் என்றென்றும் இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஊராரின் தற்போதைய பேச்சு என்பீர்கள். அது உலை வாயைப் போன்றது; காலத்தால் மூடப்பட வேண்டியது; அதற்கு நாம் மூடி தேடிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அவ்வாறு தேடுவது வெட்டி வேலை, அதுமட்டுமல்ல; அப்படித் தேடுவதே ஊர் வாய்க்குத் தீனி கொடுப்பதுபோல ஆகும்.

நாம் அஞ்சவேண்டியதே மனம் என்னும் நீதிபதிக்கு மட்டும்தான்; அந்த மனத்திற்குத்தான் உண்மையான மான அவமானம்பற்றிய நல்ல தீர்ப்பைக் கூறும் தகுதி உண்டு. மற்றவைகளைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. அப்பா......நீங்கள் எல்லாம் புரிந்தவர்கள். இருவரைப்பற்றியும் நன்கு அறிந்தவர்கள். நமது மானம் எதிலே நடமாடுகிறது என்பதனைத் தெரிந்து அதற்கான முறையில் இனியாவது தன் அன்பு மகள் நடக்க அனுமதிப்பீர்கள் என்று நம்புகிறேன். தங்களின் எண்ணம் எதுவோ அதனை எழுதுங்கள் அறிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்பு மகள்,
மல்லிகா.

குணசீலருக்குக் கடிதத்தை மறுமுறையும் படிக்கவேண்டும் என்ற ஆவல் எழுந்தது. தன் மகள் இவ்வளவு அழகாகக் கடிதம் எழுதுவாள், வாழ்வுப் பிரச்சினையை இவ்வளவு அருமையாக எடுத்துக்காட்டுவாள் என்று அவர் எதிர்பார்க்கவே இல்லை. அவள் கருத்துக்கள் இவருக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, தெளிவான எண்ணக் கோவைகளுக்காகவேனும் மறுமுறையும் படிக்கவேண்டும் என்று எண்ணினார். அடுத்து, "உம்... அவள் சொல்வதும் உண்மைதானே" என்றது அவர் மனம்.

"சே... மனம் என்னை மீறிவிட்டதே" என்றார் அவரை அறியாமலேயே. இதுவரையும் ரசம் கெட்டுப்போனக் கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது போலவும்; இக்கடிதத்தைப் படித்த பிறகுதான் ரசங் கெடாத சுத்தமான பெல்ஜியம் கண்ணாடியில் முகத்தைப் பார்ப்பது போலவும் இருந்தது அவருக்கு.

எழுந்து நின்றார் இப்பொழுது ஏதோ புதிய தெம்பு, இதுவரையும் காணாத புது உற்சாகம், உடல் முழுவதும் புதிய இரத்த ஓட்டம்... நாலு பர்லாங் தூரம் ஓடிவரலாம் போலிருந்தது.

(15-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

17–7–60.

தம்பி !

வழக்கு மன்றம் சென்றாகவேண்டும். அழைப்பு அனுப்பிவிட்டார்கள். பெற்றுக்கொண்டேன். செல்கிறேன். ஆனால், துணையின்றியும் அல்ல! உள்ளத் தூய்மையற்ற நிலையிலும் அல்ல!!

தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யும்படி, தூண்டிவிடும் முறையில் பேசினோம் என்று எடுத்துக்காட்டி, எனக்கும் தம்பி சம்பத்துக்கும், தொழிலாளர் தலைவர் அந்தோனிப்பிள்ளை, கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் கலியாணசுந்தரம், சிந்தன், ஆகியோர்மீதும் தொடரப்படும் முறையில், வழக்குத் தொடரப் படுகிறது.

அவசரச்சட்டம் அல்லவா அமுலில் இருக்கிறது. அதன் ஐந்தாம் பிரிவின்படி, நாங்கள் பேசியது குற்றம் என்று கூறி, என்ன பதில் அளிக்கப்போகிறீர்கள்? வந்து நில்லுங்கள் வழக்குமன்றத்தில்! பதில் சொல்லுங்கள்!—என்று கேட்டிருக்கிறார்கள்.

ஓராண்டு சிறைவாசமாம்—ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கலாமாம். வழக்கறிஞர்களாக உள்ள நண்பர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

வழக்கு, பொதுவாகக் கூறுகிறேன், இந்த வழக்குப்பற்றி அல்ல; இன்னவிதமாக நடந்தால், இன்னின்ன காரியத்தைச் செய்தால், அதனால் இன்னின்ன வகையான கேடுபாடுகள் விளையும், ஆகவே, கேடுபாடுகள் விளைவதற்குக் காரணமாகவும், உடந்தையாகவும் இருந்த குற்றத்துக்காக, அவ்விதமான குற்றம் செய்தால் என்ன தண்டனை தரப்படவேண்டும் என்று சட்டம் சாற்றுகிறதோ, அந்த முறைப்படி தண்டனை தருவதற்கு முன்பு, குற்றம் செய்ததாகக் கருதப்பட்டவர்களை மன்றத்தில் நிறுத்திவைத்து, விசாரிப்பது—பிறகு தீர்ப்பளிப்பது—என்ற முறையில் இருந்து வருகிறது.

பசி ஐயா! நாலு நாட்களாகப் பட்டினி! பாதை ஓரத்திலே இருந்தது பொட்டலம்! கமகமவென மணம் வீசிற்று! எடுத்தேன், பிரித்தேன், தின்றுவிட்டேன்!!—என்று சோற்றுமூட்டையைக் களவாடித் தின்றவன், கூறக்கூடும், உருக்கமுடன்; கேட்போர் மனம் உருகும்விதமாகக்கூட. ஆனால் வழக்கு மன்றம்,

உண்மையாக அவனுக்குப் பசியா?

நாலு நாட்கள் பட்டினியா?

என்று கேட்காது—அறிந்துகொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளாது.

சட்டம்—வழக்குமன்றத்தில்

"அவன், அந்தச் சோற்றுமுட்டையை எடுத்தானா?
பிரித்தானா? தின்றானா? அந்த முட்டை வேறொருவனுடையதா?"

இவைபற்றித்தான் கேட்கும், அறிந்துகொள்ளும், அறிவிக்கும். அந்தக் கட்டம் முடிந்ததும், அந்தச் செயல், குற்றம் என்று கூறும் கட்டம், பிறகு அந்தக் குற்றத்துக்கு என்னவிதமான தண்டனை தரப்படலாம் என்ற சட்டம் காட்டப்படும் கட்டம்; பிறகு தண்டனை அளிக்கப்படும் கட்டம்! வழக்குமன்றத்தின் வேலை அவ்வளவோடு முடிவடைகிறது. தீர்ப்பைக் கூறி விட்டுக், கசியும் கண்ணீரைத் துடைத்துக்கொள்ள, குமுறி எழும் பெருமூச்சை அடக்கிக்கொள்ள, வழக்கு மன்றத் தலைவர், தமது தனி அறைக்கோ, மாளிகைக்கோ, செல்லலாம்-மன்றத்திலே, சட்டம் காட்டும் வழிதான் நிற்கவேண்டும்.

மாளிகையில் சென்று, மலர்விழியாளைக் கண்டும் மகிழ்ச்சி பெறாது, குழலையும் யாழையும் மீட்டி நிற்கும் குழவிகளிடமும் கொஞ்சாமல், தீர்ப்பளித்தவர், கவலை குடையும் உள்ளத்தினராகி உழலக் கூடும். ஆனால், மன்றத்தில், அவரைக் கட்டுப்படுத்துவது, சட்டம்!

"நேரம் போவதே தெரியவில்லையா? எந்தக் கோட்டையைப் பிடிக்க, இவ்வளவு பலமான யோசனை! எழுந்திருங்கள், சாப்பிட"

என்று அன்புக்கரசி அழைக்கக்கூடும். பசியில்லை என்று சுருக்கமாக, அவர் பதில் அளிக்கக்கூடும்; அளித்துவிட்டு, வேதனை கலந்த ஒரு சிரிப்பொலி எழுப்பக்கூடும். உள்ளம் கூறும்'

"உனக்குப் பசி இல்லை!
அவனுக்குப் பசி!!

நீ, தீர்ப்பளித்தாய்!
அவன் திருடினான்!

உனக்கு உணவு காத்துக் கிடக்கிறது.
அவனைப் பசி விரட்டிற்று,

நீ, நீதிபதி!
அவன் குற்றவாளி!!

நீ, மாளிகையில்!
அவன், சிறையில்!!

தீர்ப்பளித்தவர், திகைக்கக் கூடும், உள்ளம், கூறு வனவற்றைக் கேட்டு, மாளிகையில்! ஆனால், மன்றத்திலோ, அவருக்குச் சட்டத்தின் பிடி! பிரிப்பார், படிப்பார், தண்டிப்பார்!!

வேறென்ன செய்ய முடியும்? உணர்ச்சிகளுக்கு இடமளித்துச், சட்டத்தை மறந்தால், சமுதாயம், என்ன ஆகும்? என்று கேட்போர், பலர் இருக்கிறார்கள், தம்பி. அவர்கள், என்னைப்பற்றித் தவறாக எண்ணிக்கொள்ளப்போகிறார்கள் — நான், வழக்கு மன்றங்கள்; சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கத்தான் உள்ளன, நடக்கத்தான் வேண்டும், என்ற பொது நீதியை மறுப்பவனல்ல, வெறுப்பவனல்ல. நான் எண்ணிக்கொள்வதும், எண்ணிப்பார்க்கும்படி மற்றவர்களைக் கேட்டுக் கொள்வதும், வேறு ஒன்றினைப் பற்றி—அடிப்படையான ஒரு பொருள்பற்றி!

சட்டம் இயற்றப்படும் விதம் என்ன? என்பது பற்றித்தான் நான் எண்ணிப்பார்க்கச் சொல்கிறேன்—வழக்குமன்றமுறை சரியா அல்லவா என்பதுபற்றி அல்ல.

தொல்காப்பியம் கூறுகிறது, வேறோர் பொருள் பற்றிய விளக்கமளிக்க,

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் வகுத்தனர் கரணம் என்ப"

அஃதேபோல, இயற்றப்படும் ஒவ்வொரு சட்டமும், ஏதோ ஒரு நிலைமையைச் சீர்படுத்த, குற்றம் எழாதிருக்கச் செய்ய, முறைப்படுத்தத்தான், இயற்றப்படுகின்றன. ஆனால் இயற்றும் சட்டம், இயற்றும் நிலை பெற்றோரின் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள என்றால், சட்டம் என்பது பெயரளவுக்குத் தான் பொருந்தும்—ஆனால் நீதிக்கும் அந்தச் சட்டத்துக்கும் தொடர்பு அற்றுப்போய்விடும்.

கதை படிக்கக் கேட்டிருப்பாயே, தம்பி! வேளைக்கு ஒரு ஆள் தரவேண்டும், என் பசி போக்கிக்கொள்ள; தவறினால் ஒரே நாளில் ஊரையே அழித்துவிடுவேன் என்று கட்டளையிட்ட பூதம்பற்றி — சிறியவனாக இருந்தபோது.

பூதம்கூட, சட்டம்தான் இயற்றிற்று! ஆனால் யாருக்காக? தனக்காக!! சட்டம் நீதியை உள்ளடக்கியதாகவா இருக்கிறது? பித்தனும் அவ்விதம் பேசத் துணிந்திடமாட்டான்.

தம்பி! மழை காலத்தில், சீமானின் தூக்கத்தையும் சீமாட்டிகளின் களியாட்டத்தையும் கெடுக்கும் விதமாகக் கத்திக்கிடக்கும், தவளைகளை, உழுது பிழைக்கும் ஊழியர்கள், இரவு முழுவதும் விழித்திருந்து கல்லால் அடித்துக் கொன்றாகவேண்டும் என்று சட்டம் இருந்தது, புரட்சிக்கு முன்பு, பிரான்சில்!

மீறினோர், சட்டப்படி விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். ஆனால், இதிலே கவனிக்கவேண்டிய மிக முக்கியமான விஷயம் என்ன தெரியுமா தம்பி! தண்டனை பெற்றோரின் தொகை வளர வளர, அந்தச் சட்டம் தகர்ந்தது—சட்டம் மட்டுமல்ல, அத்தகைய சட்டத்தைக் காட்டிக் கொட்டமடித்துக்கொண்டிருந்த பிரபுக்களின் பிடி! மன்னனின் மணிமுடியே பறிக்கப்பட்டது!! ஆனால், அது, பிறகு, நடந்த காதை! நெடுங்காலம், சட்டம்தான் மேலிடத்தில்! தண்டனை தந்தபடி!!

ஐரோப்பாக்கண்டத்தில், ஏழெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு, சில நாடுகளில், சட்டம் ஒன்று இருந்தது; அதைஅடிப்படையாக வைத்துப் பின்னப்பட்ட ஒரு கதையைப் படித்திருக்கிறேன் — இப்போதல்ல; நேரம் ஏது! நீ, விட்டால்தானே!! — சில ஆண்டுகளுக்கு முன்பு.

பண்ணையாள், திருமணம் செய்துகொண்டால், 'முதல் இரவு' அவனுக்கு அல்ல! பண்ணையாருக்கு!!

ஆமடா, தம்பி! ஆமாம்! அப்படிப்பட்ட 'சண்டாளத்தனம்' சட்டம்!!

"குட்டி யார்? மான்விழி! சிற்பி செதுக்கிய சிலை போன்ற உடல்! பருவக் கருவமிருந்த, வயது! யார் இந்தக் காட்டு ரோஜா?"

"என் வீட்டுக்கு வந்தவள்—என்..."

"மனைவியா! பலே! பலே! வேறெந்த வேலையிலும் திறமை இல்லாவிட்டாலும், பயலே! உனக்கு, 'உருப்படி'யைத் தேடிப்பிடிக்கும் திறமை மட்டும் நிரம்ப இருக்கிறது. எங்கு கிடைத்தாள், இந்த எழிலரசி?"

"இவளை நான் திருமணம் செய்துகொண்டேன்"

"அது தெரிகிறதடா; முட்டாளே! தேடிக்கிடைக்காத பொருள்—உனக்கு எப்படியடா கிடைத்தது."

"திருமணம்......"

"செய்துகொண்டாய்! ஆமாம்! நன்றி! மிக்க நன்றி! போய்வா!"

தம்பி! அவன் போய்விடவேண்டும் வெளியே! அவள் தங்கவேண்டும், மாளிகையில்! முதல் இரவு அங்குதான்! பிறகு, சீமான் வேறு 'சிட்டு' தேடிக் கொண்டால், இந்தக் கசங்கிய மொட்டு, வீசி எறியப்படும், கட்டியவன் அழைத்துச்செல்வான். தம்பி! இது சட்டமாக இருந்தது!!

சீமான், 'முதல் இரவு' வேண்டாமென்று கூறி, அதற்கு ஈடாக, ஊழியக்காரனிடம், பணம் பெறுவதுமுண்டு.

"சேச்சே! இழுத்துச் செல்லடா, சப்பை மூக்கை! 'முதல் இரவு'க்கு ஈடாக, பணம்கட்டு"—என்று கேட்பதுண்டு, சீமான்!

"ஆண்டவனே! அவள் அழகற்றவளாக இருந்ததால், நான் மானமற்றவனாகாது இருந்திட முடிந்தது" என்று கூறித்தொழுது, பணம் அழுதுவிட்டுப், பணியாள் செல்வான்.

கற்பைச் சூறையாடுவதல்லவா இது? என்று இன்று, எவரும் கேட்பர், கொதிப்புடன். அன்று, அது சட்டம்!! எதிர்ப்பது, பாவம்! எதிர்த்தால், அதற்கு வேறோர் சட்டம்!! கடும் தண்டனை!!

ஆனால், தம்பி! மனிதகுலத்தின் மாண்பினையே அழித்திடத்தக்க, அந்தச் சட்டம், காலம் கிளப்பிய சூறாவளியால், சுக்குநூறாயிற்று.

காலம், சூறாவளியைக் கிளப்பிவிடுமுன்பு, குறிகளைக் காட்டத் தவறவில்லை. ஆதிக்கக்காரர்கள் குறிகளைக் காணவில்லை; கண்டபிறகும் கருத்திலே, தெளிவு ஏற்படவில்லை; இறுமாப்பு அவர்களைப் பிடித்தாட்டிற்று; அவர்கள் வாழ்ந்த கோட்டைகளின் இடிபாடுகள்கூட இன்று இல்லை!

இப்படி ஒரு சட்டமா? என்று, துக்கம், வெட்கம்; துளைத்திடும் நிலையில், கேட்டிருப்பான் ஒரு காளை! அவனைக் கண்டதுண்டமாக்கிக், காக்கைக்கும் கழுகுக்கும் இரையாக்கிவிட்டு, அவன் மணமுடித்த கட்டழகியை அந்த மனிதக்கழுகு கொத்தி மகிழ்ந்திருக்கும்.

இதுதான், சட்டமா? என்று எதிர்த்திருப்பான், ஒருவன், அவன் தலை உருண்டிருக்கும்.

நீ இட்டது, சட்டமா? என்று, எதற்கும் துணிந்து வேறொருவன் கேட்டு, வெட்டுண்டு மாண்டிருப்பான்.

யாருக்காக ஐயா! இந்தச்சட்டம்?
யாரைக் கேட்டுக்கொண்டு இந்தச்சட்டம்?

என்று, விளக்கம் கேட்டிருப்பான், வேறொருவன்; அவன் 'இராஜத்துரோகி'யாக்கப்பட்டுத், தூக்கு மரத்தில், தொங்கவிடப்பட்டிருப்பான்.

இவையாவும், முறைப்படி விசாரணை நடத்தி, வழக்கு மன்றம், அளித்த தீர்ப்புகள்!!

வழக்கு மன்றங்களை அல்ல; தீர்ப்பு அளித்தவர்களை அல்ல, விசாரணை முறையை அல்ல; சட்டத்தின் இலட்சணத்தைப்பற்றியே, கேட்கலாயினர்! சூறாவளி கிளம்பிற்று! சுக்குநூறாயிற்று, அக்ரமக்காரர் ஆதிக்கம்.

இன்று, கேட்டால், கைகொட்டிச் சிரிப்பார்கள், அல்லது கோபத்தால் கண்கள் கோவ்வைபோலாகி விடும்; அப்படிப்பட்ட விதமான, சட்டங்கள் பல இருந்திருக்கின்றன; மனிதகுலம் தாங்கிக்கொண்டிருந்திருக்கிறது; மாவீரர் பலர் மடிந்தனர்; பச்சை இரத்தம் பரிமாறியபிறகு, சட்டம் காட்டிக் கொட்டமடித்து வந்த சழக்கர்களின் ஆதிக்கம், அழிந்துபட்டது.

மூன்று 'இராஜத் துரோகிகள்' வழக்குமன்றம் இழுத்துவரப்பட்டனர்; அழைத்துவந்திருக்கிறேன் மூன்று குற்றவாளிகளை என்று, அறிவித்தான், அமுல் நடத்தும் அதிகாரி. கனல் உமிழும் விழி, வழக்குமன்றத் தலைவருக்கு. விவரம் அறியாததால், திகைப்பு மூவருக்கும்.

"எங்கிருந்து இவர்களைப் பிடித்துவந்தாய்?"

"இதோ நிற்கிறானே, முதலில், இவன் நடத்தும் உணவு விடுதியில்."

"உணவு விடுதியிலா? என்ன செய்தான், இவன்?"

"இராஜத்துரோகம்."

"விளக்கம்."

"இராஜத்துரோகிகள் பதுங்கிக் கிடக்கும் இடங்கள் பற்றிய உளவு அறிந்து சென்று, கையும் பிடியுமாக அவர்களை இழுத்து வந்து தங்கள் முன் நிறுத்துவது, என் கடமை..."

"ஆம்! கடமை தவறாத அதிகாரி, என்று புகழ்பெற்று விளங்குகிறாய். என் பாராட்டுதல்."

"நன்றி! மிக்கநன்றி! தங்கள் பாராட்டுதலைப் பெற நான் பாக்கியம் செய்தவன். தங்களின், சட்டம் காக்கும் திறம், இந்த நாட்டுக்கே தனிச் சிறப்பு அளிக்கிறது."

"இவன் செய்ததைக் கூறும். நாம் இருவரும் நமது கடமையைச் செய்கிறோம்."

"உணவு விடுதியில், நமது மன்னரின் படம்..."

"காலஞ்சென்ற மன்னரின்..."

"ஆமாம்...மறந்துபோனேன் கூறிட! காலஞ் சென்ற மன்னரின் படம், தொங்கவிடப்பட்டிருந் தது..."

"இராஜத்துரோகம் செய்தான் என்றீர்..."

"ஆம்! படம், செல்லரித்த நிலையில் இருந் தது."

"செல்லரித்துக் கிடந்ததா? மன்னரின் படமா?"

"முகம், விகாரமாகிக்கிடந்தது; அழுக்கேறிய படம்!"

"அதைப், பலர் வருகிற இடத்தில் தொங்க விட்டிருந்தான்... உம்!"

"பார்ப்பவர், சிரிக்க! கேலி பேச! இழிவு படுத்தினான், மன்னரை!"

"மறுக்கிறானா?"

"மண்டைக் கர்வம் பிடித்தவன். மறுக்க வில்லை. விளக்கம் தருகிறான்."

"விளக்கம் தருகிறானா, விவேகி. அவனிடம், விளக்கம் ஏன் கேட்டாய்? வீண் வேலை!"

"கேட்டது நானல்ல. இதோ நிற்கிறானே பக்கத்தில், இவன் கேட்டான்."

"என்ன கேட்டான், இந்தத் துரோகி."

"சிறிதளவு விவரமாகப் பேச அனுமதி தாருங்கள். உணவு விடுதி சென்று, இவர் களுக்கு அருகே உட்கார்ந்தபடி, யாரார் என் னென்ன போக்கிலே இருக்கிறார்கள் என்பதை உன்னிப்பாகக் கவனித்தபடி இருந்தேன். என் னைக் கண்டதும், ஏதும் பேசாமல் இருந்தனர்—கொஞ்சநேரம். நானாக, பேசவைத்தேன். வருத்த மாக இல்லையா உனக்கு? என்று கேட்டேன்; இவனை. எனக்கென்ன வருத்தம், என்றான்..."

"நாடு துக்கத்தில் மூழ்கிக் கிடக்கிறது, மன் னர் படுகொலை செய்யப்பட்டது கேட்டு. இவன்..."

"துளியும் வருத்தப்படவில்லை. துணிந்து எனக்கென்ன வருத்தம்? என்று, என்னையே கேட்டான். நமது மன்னர் படுகொலை செய்யப் பட்டது, தெரியுமல்லவா? என்று கேட்டேன், நான் அவரைப்பார்த்ததுகூட இல்லை, என்றான்"

"மன்னரைப் பார்த்ததில்லை என்று கூறினான்! அட! படுபாவி! மன்னன்தானே கண் கண்ட கடவுள்."

"அவ்வளவு இராஜத்துரோகம் இவனுக்கு. இவன், நான் மன்னனைப் பார்த்ததுகூட இல்லை என்று சொன்னதும், இதோ இவன், உணவு விடுதிக்காரன், படத்தைக் காட்டி, இதோ, மன்னர்! என்றான்."

"செல்லரித்த படத்தைக் காட்டி!"

"மன்னன் அவ்வளவு குரூபி என்று மற்ற வர்கள் எண்ணிக்கொள்ள..."

"இழிவு படுத்தினான்."

"படத்தைப் பார்த்ததும் இந்தப் பயல், நீ மன்னனை முன்பே அழித்துவிட்டாய்! என்று கூறிச் சிரித்தான். அவன், 'நானா? செச்சே! செல், அரித்துவிட்டது!!' என்றான். அதாவது மன்னனை, மனிதன்கூட அல்ல, கேவலம் பூச்சிப் புழுக்களே அழித்துவிடும், என்று சபித்தான் இருவரையும் அதே இடத்தில் இராஜத்துரோகி என்று குற்றம் சாட்டி, விலங்கிட்டேன்..."

"இந்த மூன்றாவது ஆசாமி?"

"இவன் இந்த இருவரையும்விட மோசமான வன். இராஜத்துரோகிகளை நான்கண்டுபிடித்துக், கைகளுக்கு விலங்கிட்டு, இழுத்து வருகிறேன், இவன் ஒரு துளிகூடப் பதறாமல், மன்னரையா இந்த மாபாவிகள் இழிவுபடுத்தினார்கள் என்று கொதித்தெழுந்து கூறாமல், இத்தகைய இழி மக்களைக்கண்டுபிடித்த என்னைப் பாராட்டாமல்.."

"என்ன செய்துகொண்டிருந்தான்?"

"காப்பி குடித்துக்கொண்டிருந்தான்!"

"பதறாமல்."

"அமைதியாக!"

"அழுத்தக்காரன்! மூவருக்கும் மரண தண் டனை."

*

தம்பி! ஐரோப்பாக் கண்டத்திலே ஒரு நாட்டின் நிலைமை விளக்க, இப்படி ஒரு விசாரணைபற்றி எழுதப்பட்டிருந்தது; படித்திருக்கிறேன்.

மன்னனை இழிவு படுத்துவது குற்றம்! அதை மறுக்கவேண்டியதில்லை.

ஆனால், இந்த மூவர் மன்னரை இழிவுபடுத்திய தாக எடுத்துக்காட்ட, என்ன கிடைத்தது, கவனித் தாயா?

அது போதுமானதாக இருந்தது, மரண தண் டனை தர.

*

இப்படிக்கூட இருக்குமா? நடக்குமா? சட்டம் என்றா இவைகளைக் கூறுவது? விசாரணை என்றா இதற்குப் பெயர்? காட்டுமிராண்டிக் காலத்து அமுல் அல்லவா இது? அரசியல் தெளிவும், உரிமை உணர் வும், மிகுந்திருக்கும், இந்த நாட்களிலே எவர் ஏற்றுக் கொள்வர், இத்தகு அக்ரமத்தை?—என்றெல்லாம் கேட்கப்போகிறாய்—தெரியுமே, எனக்கு. மக்களாட்சி யின் மாண்புபற்றியும் உரிமை உணர்ச்சி வெற்றி பல பெற்றதுபற்றியும், நிரம்ப அறிந்திருக்கிறாய். ஆனால், தம்பி! காட்டுமிராண்டிக் காலம் என்று ஒன்றும், தெளிவுள்ள காலம் என்று மற்றொன்றும், தனித்தனி யாக இருக்கும் என்று எண்ணாதே! முழு நிலவு தவழ்ந்திடும் வானவீதியிலேயேதான், கும்மிருட்டு—அமாவாசை—இருந்திடக் காண்கிறோம்.

இப்போதுகூடக், காட்டுமிராண்டிக் காலத்தவை என்று எள்ளி நகையாடத்தக்க சட்டங்கள், ஜனநாயக நாடுகள் என்ற பட்டியலில் இடம் பொறித்துக்கொண்டுள்ள சில நாடுகளில், அமுலில் உள்ளன.

தம்பி! மறந்துவிடாதே, முறைப்படி நிறைவேற்றப்பட்ட சட்டங்கள்!! எவனோ எதேச்சாதிகாரியின் இறுமாப்பின் விளைவு அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களாட்சி நடத்திவரும், மக்களின் தலைவர்கள், மக்களுக்காக, மக்களின் ஆதரவுபெற்று, மக்கள் மன்றத்திலே பேசி, முடிவு எடுத்து, நிறைவேற்றப்பட்டு, அமுலில் இருந்துவரும் சட்டங்கள்!!

டாக்டர் வெர்வுட்! தென் ஆப்பிரிக்க அரசுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் முதல்வர்.

கண்ணை மூடிக்கொண்டு அவரைத் தேர்ந்தெடுத்தார்கள் என்றும் கூறிவிட முடியாது. உருட்டி மிரட்டிப் பதவியைத் தட்டிப் பறித்துக்கொண்டார் என்றும் குற்றம் சுமத்த முடியாது. நல்லாட்சிக்கு வழி என்று எந்தத் தேர்தல் முறையைப் பல நாடுகள் மேற்கொண்டுள்ளனவோ, அதே போன்ற முறையிலே அமைக்கப்பட்ட அமைச்சர் அவையின் தலைவர், டாக்டர் வெர்வுட்.

அவர் உலகமறியாதவருமல்ல—அறநூற்களைத் தெரியாதவருமல்ல.

அவர் நாட்டிலே, கருப்பர் என்பவர்கள், படும்பாடு, உலகிலே உள்ள நல்லறிவாளர்களின் உள்ளத்தை வேகவைப்பதாக இருக்கிறது.

நாட்டிலே, கருப்பர், வெள்ளையர் கண்படாத இடத்தில், தனியாகத்தான் இருக்கவேண்டும்.

மருத்துவராக இருக்கலாம், மதகுருவாகப் பணியாற்றலாம், வழக்கறிஞராக, பேராசிரியராக, வணிகராக, எப்படிப்பட்ட அறிவாற்றல் மிக்கவராக இருப்பினும் சரி, கருப்பர் என்றால் ஊரிலே, ஒரு ஒதுக்கிடம்—பொது இடத்தில் அல்ல—வெள்ளையர் வாழுமிடத்தில் அல்ல.

கலந்து இருந்து வருகிறோமே என்கிறார்கள், கருப்பர்—இனி அது கூடாது — என்று சட்டம் கூறுகிறது—விரட்டுகிறது.

வாழுமிடங்களில் மட்டுமல்ல இந்த வேதனை தரும் வேற்றுமை — தொழிலிடம், கல்விக்கூடம், தொழுகை இடம்—கேளிக்கைக்கூடம் எங்கும்--வேறு வேறுதான்!

பல அலுவலகங்களில், வேறு வேறு இடங்களில்தான் இருக்கவேண்டும் என்பது மட்டுமல்ல—நுழைவு இடங்களே தனித்தனி.

வெள்ளையருக்கு மட்டும் என்று இருக்கும் நுழைவு இடத்தில், கருப்பர் சென்றால், கடும் தண்டனை—கசையடிகூட!!

இரயிலில், பஸ்ஸில், மருத்துவமனையில், எங்கும், தாழ்நிலை, இழிநிலை, கருப்பர் என்போருக்கு.

தம்பி! கொடிய நோய்வாய்ப்பட்டவர்களுக்கு இரத்தம் சுண்டிப்போனால், புதிய இரத்தத்தை உள்ளுக்குப் புகுத்துகிறார்களல்லவா — அதிலேகூடக் கருப்பருக்கு, கருப்பரின் இரத்தம்! வெள்ளையருக்கு வெள்ளையரின் இரத்தம்! இதுவும் சட்டப்படி; மீறினால் கடும் தண்டனை!!

உலகிலுள்ள நல்லறிவாளர்களெல்லாம் கண்டிக்கிறார்கள். டாக்டர் வெர்வுட், சட்டப்படி நடக்கிறேன், தவறா? என்று கேட்கிறார். இது சட்டமல்ல? என்று எவரேனும் வாதாடினால், ஜனநாயக முறைப்படி அமைக்கப்பட்ட, மக்கள் மன்றத்தில், பெருவாரியான உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்றுச் சட்டம் இயற்றப்பட்டது, என்று எடுத்துக்காட்டுகிறார்.

இருப்பினும், இது சட்டம் அல்ல! சட்டம் என்று ஏற்றுக்கொள்ளமாட்டோம்! சட்டம் என்று நீங்கள் கூறலாம், ஆனால் நாங்கள் அதை மதிக்கமாட்டோம்! என்று பலரும் கூறுகின்றனர்.

இருப்பினும் இது சட்டமல்ல! — என்று கூறப்படுகிறதே, தம்பி! இதை வழக்குமன்றம் ஏற்றுக்கொள்ளாது, வழக்குமன்றத்தில் கூறவும் மாட்டார்கள். வழக்குமன்றம், தரப்பட்டுள்ள சட்டப்படி, குறிப்பிடப்பட்டுள்ள தண்டனையைத் தருகிற இடம்! சட்டத்தின் பிறப்பு வளர்ப்பு, பெற்றோர் உற்றார், இவைபற்றிய விசாரணை நடத்தும் இடம் அல்ல!!

சட்டத்தின்படி நடந்துகொள்கிறோம் என்று வழக்குமன்றத்தினர் பேசுவர்; ஆனால் சமூகத்தில் உள்ள நல்லறிவாளர்கள், சட்டத்தை நிறுத்தி வைத்து, விசாரணை நடத்தித் தீர்ப்பளிக்கவேண்டும்.

குற்றவாளியின் பெயர், வயது, தொழில், ஊர், இவைகளை, வழக்குமன்றம் விசாரிக்கும்.

சமுகம், சட்டத்தின் பிறப்பு — இலட்சணம் — அதன் விளைவுகள்--இவைகளை விசாரித்துப்பார்த்து தீர்ப்பளிக்கவேண்டும்....

வழக்கு விசாரணை நாட்கணக்கில், மாதக்கணக்கில், மிகச் சிக்கலானதாக இருப்பின், வருடக்கணக்கில்கூட நடந்தேறி முடிவடையும்.

சமுகம், சட்டத்தைப்பற்றிய விசாரணை நடத்தித் தீர்ப்பளிக்க, ஆண்டுகள் அல்ல, நூற்றாண்டுகள் பிடிக்கும்.

அதற்கு இடையில், பலர், பலியாகவேண்டும்—சட்டம் தன் வேலையைச் செய்துகொண்டேதான் இருக்கும்.

*

பெற்ற தாயிடமிருந்து குழந்தையைப் பிரிப்பது, தாங்கிக்கொள்ளக்கூடிய கொடுமையா? எவ்வளவு இரக்கமற்ற மனம் இருந்தால், அதுபோல் செய்வார்கள்? மனிதமிருகங்கள் என்பாய், அப்படிப்பட்டவர்களை! சட்டப்படி அந்தக் காரியம் நடந்திருக்கிறது என்று காட்டுகிறேன். என்ன சொல்கிறாய்? என்றோ ஒரு நாள்—மனித குலம் முன்னேறாத நாட்களில் நடந்

இருக்கும் என்று கூறித் தப்பித்துக்கொள்ள முடியாது தம்பி! இது இப்போது நடைபெற்றது.

ஜொஹானு செலிமா முனேனி—ஒரு குழந்தையின் பெயர்.

இதில், முனேனி என்பதற்கு, என்ன பொருள் தெரியுமா! 'எம்மைப் பிரியாள்' என்பது பொருள். அவ்வளவு அன்புடன், செல்லமாகப் பெயரிட்டனர் குழந்தைக்கு. ஆனால் அந்தக் குழந்தை, பெற்றோருடன் இருக்கக்கூடாது என்று சட்டம் கூறுகிறது—டாக்டர் வெர்வுட்டின் சட்டம்!

பாட்ரிக் மாடிம்பா என்பவர், தந்தை; வழக்கறிஞர்; வயது முப்பதுக்குள்; ஆப்பிரிக்கர்; டாக்டர் வெர்வுட்டின் மொழிப்படி கருப்பர்!

அவர் டச்சு நாட்டைச் சேர்ந்த ஒரு மங்கையை மணம் செய்துகொண்டார், இங்கிலாந்தில் படிக்கும்போது. அவள், வெள்ளையர் இனம்!

முனேனி பிறந்தாள். மூவருமாக ஆப்பிரிக்கா வந்தனர்.

அங்கு சட்டம் கட்டளையிடுகிறது, தாய் டச்சு நாட்டு வெள்ளைக்காரி, எனவே அவள் வெள்ளையர் வாழும் பகுதியில்தான் இருக்கவேண்டும்; தந்தை கருப்பர், எனவே வேறு இடத்தில் கருப்பருக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்குப் போயாகவேண்டும், குழந்தை கலப்பு இனம்—எனவே, இரு இடத்திலும் இருப்பதற்கில்லை, கலப்பு இனம் வாழவேண்டிய இடம் கொண்டுபோகப்படவேண்டும், என்று சட்டம் ஆணையிடுகிறது.

"எம்மைப் பிரியாள்" என்று தாயும் தந்தையும் குழந்தையைக் கொஞ்சிக் கொஞ்சி முத்தமிட்டிருப்பர்; குழந்தையும் தாயிடம் தாவித் தாவிச் சென்று விளையாடி இருக்கும், தந்தையின் கன்னத்தில் முத்தமிட்டிருக்கும்; ஆனால் சட்டம், தாயையும் சேயையும் பிரிக்கிறது! இப்படி ஒரு சட்டமா? என்று கேட்பதே சட்ட விரோதம்.

இது நாடு அல்ல, காடு! சட்டமல்ல, சண்டாளத்தனம்! என்று, ஆப்பிரிக்காவில் இருந்துகொண்டு அல்ல, வெளியேறி வேறு நாடு சென்றுதான், அவர்கள் பேச முடிகிறது. சட்டம் பார்த்தாயா, தம்பி! 1960ல்!! மக்களாட்சியில்!!

அந்தச் சட்டத்தை, வழக்குமன்றம், மதித்தாக வேண்டும்! ஆட்சியாளர் அதை அமுல் நடத்தித் தருவார்கள். அறிவுலகம் கண்டிக்கும்! ஆனால், அந்தச் சட்டம் அமுலில் இருக்குமிடத்தில், அதை மதிக்க மறுப்போரும், மீறி நடப்போரும், தண்டிக்கப்படுகிறார்கள்—சட்டப்படி!!

மக்களால் அமைக்கப்பட்ட அரசு, மக்கள் மன்றத்தில் பேசி முடிவு எடுத்து, சட்டம் இயற்றுகிறது. சட்டம்பற்றிப் பேசப்படும்போது, பலரும் தத்தமது கருத்துரைகளை வழங்குகிறார்கள், திருத்தங்களைத் தருகிறார்கள், வாக்கெடுப்பு நடக்கிறது, பிறகே சட்டமாகிறது. ஆகவே, சமுகம், அந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்கிறது என்று கூறுவது கேட்டிருப்பாய். அப்பழுக்கற்ற வாதம்! திறமை மிகுந்ததுங்கூட!

ஆனால், அடிப்படையில் உள்ள நிலைமையைக் கவனித்தாயா?

மக்களாட்சி முறைப்படி, பெருவாரியான இடங்களை, மக்கள் மன்றத்திலே பெற்ற கட்சியினர், என்ன தேவை என்று நினைக்கிறார்களோ, அவ்விதம் சட்டம் இயற்றிக்கொள்ள முடிகிறது.

எதிர்ப்பு இருக்கலாம், அந்த எதிர்ப்புரையில் நியாயம் இருக்கலாம்; நிபுணர்கள் சிக்கல்களை எடுத்துக்காட்டலாம், அவை உண்மையாக இருக்கலாம்; ஆனால், கடைசியில், 'ஓட்' தானே — சட்டமாகிவிடுகிறது, ஆளும் கட்சியின் விருப்பம். எதைச் சொன்னால் என்ன? நிதிமந்திரிபோல் வாதத்திறமையைக் காட்ட வாய்ப்பு என்று எண்ணி, எதிர்ப்புரைகளின் உள்ளே நுழையாமல், பேசுவோர்மீது கேலி வீசி, மேதை என்று அரசியல் பந்துக்களிடம் பெயரெடுக்கலாம்; சட்டம் நிறைவேறிவிடும். அல்லது அந்த வீண் வேலை தான் நமக்கேன் என்ற போக்கில், அமைச்சர் பக்தவச்சலத்தைப்போல, எதிர்தரப்பினர் ஆவலுடனும் நம்பிக்கையுடனும் எடுத்துச்சொல்வதை எல்லாம், துளி அளவு உணர்ச்சியும் காட்டாது கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, எழுந்து நின்று கனம், இன்னார் சொன்னதை ஏற்றுக்கொள்வதற்கில்லை, என்று பேசிவிட்டு, உயர்த்தப்படும் கரங்களைத் துணைக்கு அழைத்துக்கொள்ளலாம்.

இந்த விதத்தில், சட்டங்கள் இயற்றிக்கொள்ள வாய்ப்புப்பெற்ற ஆளுங் கட்சியை, ஆட்சிப் பொறுப்பில் மக்கள் அமர்த்தியது, இந்தவிதமான சட்டங்கள் இயற்றுவார்கள், இயற்றவேண்டும், என்பதற்காக அல்ல. வேறு பொதுவான நல்லியல்புகளோ, சுவையுள்ள வரலாறோ, திறமையோ இருப்பதாகக் கண்டறிந்த காரணத்தால். பந்தல்போட வந்தவன், சொந்தம் கொண்டாடத் தொடங்கினால், வந்த வேலையைப் பார்த்துவிட்டுபோ! என்போம்; ஆளுங் கட்சியை அவ்விதம் சொல்லமுடியாதே, ஐந்தாண்டுகள் வரையில்!!

சட்டம், பிறப்பது இவ்விதத்தில்.

அதிலும், இப்போது எங்கள்மீது தொடரப்படும் வழக்கு, மக்கள் மன்றத்தில் பேசி, விவாதித்து, முடிவு கண்டு, இயற்றப்பட்ட சட்டம் அல்ல. இது அவசரச் சட்டம்.

சட்டத்தில், அவசரம் இருக்கக்கூடாது—எனினும் இது அவசர சட்டம் என்றே பெயரிட்டு அழைக்கிறார்கள். ஏனோ!

இந்த அவசரச்சட்டம், மிக நிதானமாக யோசித்து உரையாடி, விளக்கம் பெற்று, விவாதித்து, பல நாடுகளிலே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள, வேலை நிறுத்த உரிமை சட்டபூர்வமானது என்பதையே, மறுக்கும் சட்டம்!

தம்பி தசரதன் ஒரு நாள் கூறக்கேட்டேன்—அங்காடியில் கிடைத்தது, திடீர் பாயசம் என்று. என்னவென்று கேட்டதில், திடீரெனப் பாயாசம் தேவைப்பட்டால், ஒரு பிடி அந்தத் தூளை எடுத்து கொதிக்கும் தண்ணீரில் போட்டுக் கலக்கினால் பாயாசமாகுமாம்—பருகலாமாம்—பருகினதாகச் சொன்னார்.

பாயாசம் செய்யப்படும் முறையோ, மிகப் பக்குவமானது. நன்றாகக் கலந்து, குழம்பி, கொதித்து, பதமான பிறகு, பாயாசமாகும்; நேரம் பிடிக்கும்; நொடியில் ஆகாது. ஆனால், அங்காடியில் கிடைக்கிறதாமே திடீர்ப்பாயாசம், அதுபோல அரசியல் அங்காடி, அவ

சரச் சட்டம் தருகிறது. இது தனி! தனியான மகத்துவம் வாய்ந்தது. இதைத் திறம்படப் பயன்படுத்திப் பலன் காணும் இதே காங்கிரசார், வெள்ளையர்கள் அவசரச்சட்டம் போட்டபோது பேசிய பேச்சினை நான் கேட்டிருக்கிறேன்; நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் என்று தோன்றும் வெள்ளைக்காரருக்கு, அந்தப் பேச்சுகளைக் கேட்டிருந்தால்.

பேசினோர்கள் அப்போது, இப்போது வெள்ளையராகி வெறியாட்டம் ஆடுகிறார்கள்.

அந்த வெறியாட்டத்தையே நாடு தாங்கிக்கொள்கிறபோது, நம்மிலே சிலர் வழக்குகள், விளைவுகள் ஆகியவற்றையா, தாங்கிக்கொள்ளக்கூடாது!

வழக்கு என்றதும், எனக்கு என்னவோ உன்னிடம் பொதுவாகவே, சட்டம் என்பது பற்றிய பேச்சுப் பேசலாமா என்று தோன்றிற்று; அதனால்தான் இது.

சட்டம், தூய்மையான உள்ளத்துடன், நெறி தவறு முறையில் இயற்றப்பட்டாலும், இயற்றியவர்கள் சமுகத்தில் எவ்விதமான அமைப்பு, இருக்க வேண்டும் என்று விரும்பி, அதனைத் தமது குறிக்கோள் ஆக்கிக்கொள்கிறார்களோ, அதனை நிலை நிறுத்தவும், மற்றவர்களும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஏற்றுக்கொள்ளவும் செய்வதற்காக வடித்தெடுக்கப்படும், கருவி—வேறென்ன!

சமுக அமைப்பிலே ஒரு அடிப்படை மாறுதல் தேவை என்று நெஞ்சார உணர்ந்து, அதற்கான குறிக்கோளைச் சமைத்தளிக்கும் ஒரு இயக்கம், அல்லது சிலர் அந்த குறிக்கோளுக்காகப் பாடுபடும்போது, ஏற்கனவே உள்ள சட்டங்களின் காரணமாக வழக்கு மன்றம் இழுக்கப்பட்டால், வருத்தமடையாது செல்வதும், கடும் தண்டனை தரப்பட்டால், கலங்காது ஏற்றுக்கொள்வதும், அவர்கள் செலுத்தவேண்டிய காணிக்கை, அதனைத் தருவதற்கு எனக்கு வாய்ப்புகள் கிடைக்குமானால், அதைவிடப் பேறு வேறென்ன இருக்கமுடியும்.

குறிக்கோளைப் பெரிதெனக் கொண்டவர்கள், அந்தக் குறிக்கோளை நாடு ஏற்றுச் செயல்படுவது எப்போது என்பதில் நாட்டம் கொண்டவர்கள்மீது, சட்டமாகட்டும், அவசரச் சட்டமாகட்டும், வீசப்பட்டால், விசாரப்படவா செய்வர்? வழக்குமன்றம் தன் கடமையைச் செய்கிறது. நாம் நமது கடமையைச் செய்வோம், என்றே இருப்பர்.

விடுதலை விரும்பிகள் அந்த மனநிலையைப் பெறுவதற்கு, வழக்குமன்றங்கள் மெத்தப் பயன்பட்டிருக்கின்றன.

இடையிலே வந்தது இருக்கட்டும், இந்தி விஷயத்தை எடுத்துக்கொள். அதுகூடச் சட்டம்தான்! இந்திய அரசியல் சட்டம்! அதிலே, 1965ல் இந்தி ஆட்சிமொழி ஆகியே தீரவேண்டும் என்று இருக்கிறது. அடடா! சட்டம் அப்படி இருக்கிறதே, நாமென்ன செய்வது என்று இருக்கிறோம், முடியுமா! இருக்கலாமா! இருந்திடுவோர், தமிழரா!!

அது ஆகாது, தீது, ஏற்கமாட்டோம், என்று தமிழகம் கூறுகிறது.

சட்டமய்யா, சட்டம்!—என்று ஆர்ப்பரிக்கின்றனர், ஆளவந்தார்கள்.

பதில் என்ன தருகிறோம், யார் போட்ட சட்டம்? யாருக்காகப் போடப்பட்ட சட்டம்? எப்படிப் போடப்பட்ட சட்டம்? ஏன் அப்படி ஒரு சட்டம்? என்றெல்லாம் கேட்கிறோம்.

கவனித்தாயா, தம்பி! சட்டத்தைச் சமுகம் விசாரிக்கிறது! உன் பிறப்பு என்ன, வளர்ப்பு என்ன, இலட்சணம் என்ன என்று!!

என்னையும் நண்பர்களையும் வழக்குமன்றத்தில் நிற்கவைத்து, விசாரணை நடத்துவார்கள்.

ஆனால் சுவையுள்ள, பயனுள்ள, சிறப்புமிக்க, வரலாற்றில் இடம் பெறத்தக்க விசாரணை, சமுகம் நடத்திக்கொண்டிருக்கிறது—சட்டத்தைக் கூண்டில் நிறுத்தி!!

காணவேண்டிய காட்சி, கேட்டு இன்புறவேண்டிய செய்தி, அதுதான்.

தொழிலாளர்களைத் தூண்டிவிடப் பேசியதாக வழக்குத் தொடரப்படுகிறது.

நானும் நீயும், தம்பி! மிகப் பெரிய குற்றம் ஒன்றினைச் செய்துகொண்டே இருக்கிறோம். சட்டத்தைக் கூண்டிலேற்றி விசாரணை நடத்தச் சொல்லிச், சமுகத்தை—தூண்டுவது அல்ல—தட்டி எழுப்பியபடி இருக்கிறோம்.

அந்த விசாரணை நாளைத்தான், நாம் எதிர்பார்த்தவண்ணம் இருக்கிறோம்.

இந்திய அரசியல் சட்டமே! எல்லா அதிகாரத்தையும் மத்திய சர்க்காரில் குவித்துக்கொண்டு மாநிலங்களை மட்டமாக்கி வைத்திருக்கிறாயே! ஏன்? என்று சொல்! நியாயமா? என்று கூறு!

வளமெல்லாம் ஓரிடத்திலும், வறுமை பிறிதோரிடத்திலும் இருக்கும் விதமான ஆட்சி அமைப்புக்கு வழி வகுத்துவிட்டாயே, ஆகுமா இந்த அநீதி?

வரலாற்றுச் சிறப்புப்படைத்த மொழியைப் பெற்றுப் பெருமைகொண்டவர்கள்மீது இந்தியைத் திணிக்கலாமா?

குறிப்பிட்ட சில மாநில மக்களின் தாய்மொழியான இந்தியை பொது ஆட்சிமொழி ஆக்கத் துடிக்கிறாயே, அதன் விளைவாக அந்த மக்களை மேலோர் ஆக்கி எம்மைத் தாசர்கள் ஆக்கிடும் சூழ்ச்சியைச் செய்யலாமா? — என்றெல்லாம், சமுகம், கேட்கப் போகிறது—கேட்கும் தெளிவு பரவிவிட்டது, துணிவும் துளிர்த்துக்கொண்டிருக்கிறது.

அந்த விசாரணை நாள், விரைந்து பெறப்படவேண்டும். அந்தப் பணியில் ஈடுபட்டிருப்போர், எத்தனைமுறை வழக்குமன்றம் செல்லவேண்டி வந்தாலும், அவை, வாய்ப்புகள் என்றே கொள்ளவேண்டும்.

அத்தகைய வாய்ப்பு எனக்கு கிடைக்கிறது! உனக்கு? எப்போது?

அண்ணன்,

அண்ணாதுரை

இந்தி எதிர்ப்பு அறப்போராட்டம்

நிதி திரட்டுமாறு பொதுச்செயலாளர் வேண்டுகோள்

திராவிடப் பெருங்குடி மக்களுக்கு வளமற்ற இந்தி மொழி தேவைப்படவில்லை என்றும், தங்கள் தங்கள் மாநில ஆட்சிக்குத் தாய்மொழியும், திராவிடக் கூட்டாட்சிக்கு நான்கு திராவிட மொழிகளும், பிறவகையில் ஏற்படும் அகில உலகத் தொடர்புக்கு ஆங்கில மொழியும் போதுமானவைகளாக இருக்கின்றனவென்றும் திராவிட முன்னேற்றக் கழகம் பல்லாண்டுகாலமாக வற்புறுத்தி வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமின்றி தென்னக அறிஞர் பெருமக்கள் பலரும் மேற்கண்ட கருத்தையே மீண்டும் மீண்டும் பலகாலமாக வற்புறுத்தி வந்திருக்கின்றனர்.

என்றாலும், தென்னக மக்களின் இந்தச் சீரிய எண்ணத்தை மதிக்காமலும், விருப்பத்தை அறிய முயலாமலும், உரிமை வேட்கையைப் புறக்கணித்தும் தேவையற்ற இந்தியைத் திராவிடத்தின்மீது வலுக்கட்டாயமாகத் திணித்தே தீருவது என்று, வடநாட்டு இந்தி ஏகாதிபத்திய ஆட்சி முடிவு செய்துவிட்டது. அதனை முழுமூச்சோடு எதிர்த்தே தீர்வது என்று திராவிட முன்னேற்றக் கழகம், அறப்போராட்டக் கொடியை உயர்த்தி இருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் ஒரே மொழிதான் தேசிய மொழியாகவும், ஆட்சி மொழியாகவும், இருக்க வேண்டும்; அந்த மொழி இந்தியாகத்தான் இருக்கவேண்டும்; இந்தியாக மட்டுமேதான் இருக்கவேண்டும் — என்ற முறையில் இந்திமொழி வெறியர்கள் இப்போது கொக்கரித்துக்கிளம்பியிருக்கின்றனர். இந்திமொழியின் இந்தப் படையெடுப்பு, திராவிட மொழிப்பற்றை அழிக்கும்; மொழிப்பற்றை அழித்து, திராவிட இனப்பற்றை அகற்றும்; இனப்பற்றை அகற்றி, திராவிட நாட்டுப்பற்றை நீக்கும்; நாட்டுப்பற்றை நீக்கி, திராவிட நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை அடியோடு போக்கும்; வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு திராவிடத்தை என்றென்றும் அடிமையாக்கும்—என்று, திராவிட முன்னேற்றக் கழகம் பல்லாண்டுகளாகச் சொல்லிவந்திருப்பதோடு, இந்தி வலுக்கட்டாயமாகப் புகுத்தப்படும் ஒவ்வொரு கட்டத்திலும் தன்னுடைய எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டி, அடக்குமுறைகளைத் தாங்கித் தொல்லை துயரங்களை ஏற்றும், போராடியும் வந்திருக்கிறது.

தற்போது அந்த இந்தி, ஆணவ அதிகாரத்தின் துணைகொண்டு, புதுமுறுக்கோடும் திட்டமான முடிவோடும் ஆதிக்கஞ் செலுத்தப் புறப்பட்டு இருக்கிறது. அதனைத் தென்னக மக்களின் சார்பாக, அதேவிதமான புது முறுக்கோடும் திட்டவட்டமான முடிவோடும் எதிர்த்துத் தீர வேண்டிய கட்டத்திற்கு தி. மு. கழகம் வந்து சேர்ந்திருக்கிறது.

இதன் காரணமாகத்தான் தி. மு. கழகம் 19-6-60ல் குமாரபாளையம் பொதுக்குழுவில் இந்தி எதிர்ப்பு அறப்போராட்டக் கொடியை உயர்த்தி, அறப்போராட்டச் செயல்களை முறைப்படி மேற்கொள்ள முனைந்திருக்கிறது.

தென்னக மக்களின் சார்பாக, கழகம் துவங்கியிருக்கும் இந்தச் சீரிய பணிக்கு, நல்ஆதரவும் நல்ஒத்துழைப்பும் நல்கப், பல்துறை அறிஞர் பெருமக்களும், மொழி அன்பர்களும், நாட்டு விடுதலை வீரர்களும், தொழிலாளிப் பாட்டாளி மக்களும், பெருந்திரளினராக முன்வரும் காட்சியும் மாட்சியும் மட்டற்ற மகிழ்ச்சி அளிப்பனவாகும்.

மொழிகாக்கும்—நாடுகாக்கும் அறப்போராட்டம் மிகச் சீரிய முறையில் வெற்றிபெற, திராவிடப் பெருங்குடி மக்களின் உள்ள வலிவும், உரை பொலிவும், உடல் உழைப்பும், பொருள் உதவியும் மிகப்பெரும் அளவுக்கு வேண்டப்படுவனவாகும்.

இந்த நிலைமைகளை அறிந்து, இயன்ற உதவிகளை எல்லாம் செய்ய முன்வருமாறு பொதுமக்களையும், கழக ஆதரவாளர்களையும். கழகத் தோழர்களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

கழகத் தோழர்களும், கழக ஆதரவாளர்களும், பொதுக்கூட்டங்கள் மூலமாகவும், நிதி நிகழ்ச்சிகள் வாயிலாகவும், அமைப்புக்களிடத்திலும் தனிப்பட்டோரிடத்திலும் நிதி திரட்டுவதன் மூலமும், பொருள் திரட்டி அதனை அவ்வப்போது தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

நிதி திரட்டும் கடமையாற்ற இன்றே புறப்படுமாறும், இனிதே திரட்டுமாறும், நன்றே சேர்ப்பிக்குமாறும் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்' சென்னை-13.
5—7—1960

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர் தி. மு. க.

குறிப்பு: நிதி அனுப்பவேண்டிய முகவரி:—

பொதுச்செயலாளர், தி. மு. கழகம்,
'அறிவகம்' சென்னை-13.

பொன்னித்தீவில் கன்னித்தெய்வம்

ப. உ. சண்முகம்

"என்ன அதிகமான்? ஏதாவது ......ஆபத்தா?" என்று வரவேற்ருன் மார்த்தாண்டன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. தங்களிடம் கொஞ்சம் தனியாகப் பேசவேண்டும்"

"எதைப்பற்றி?"

"என் எதிர்காலம்பற்றி"

"என்ன புதிர்போடுகிருய்?"

"புதிரல்ல......புதுவாழ்வு தேட விரும்புகிறேன்"

"புது வாழ்வா?"

"ஆமாம். கள்ள வாழ்வைவிட்டு நல்ல வாழ்வு தேட விரும்புகிறேன்."

"என்ன சொல்லுகிருய்?"

"அதிர்ச்சியடையாதீர்...எனக்கு இந்த வாழ்வு பிடிக்கவில்லை. மனதிற்குப் பிடித்த பெண்ணை மணந்துகொண்டு நாலுபேர் மதிக்கும் நல்ல வாழ்வுதேட விரும்புகிறேன்"

ஹூம்!...குயில் காகத்தின் கூட்டில் இருப்பது, அதற்கு இறக்கை முளைக்கும்வரை தான்போலும்"

"என்ன?"

"அதிருக்கட்டும்......உனக்கேன் இந்த எண்ணம் இப்போது வந்தது."

"நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன்"

"இளமையில் இயற்கையாக விளையக்கூடியது... அதற்காக?"

"அவளோடு நான் வாழவேண்டும்"

"தாராளமாகச்செய். தடுப்பாரில்லை; இங்கேயே அழைத்து வந்து வாழ்"

"முடியாது"

"ஏன்?"

"நான் கள்ளன் என்று தெரிந்தால் என் காதலை உதறித்தள்ளி விடுவாள்"

"கள்ளத் தொழிலை என்ன அவ்வளவு கேவலமான தொழிலாகக் கருதுகிருயா? உலகில் திருடாதவன் யார்? ஒவ்வொருவர் செய்யும் இத்தொழிலுக்கு ஒவ்வொரு பெயர் வைத்துள்ளார்கள். அவ்வளவுதான். மன்னன் திருடுவதற்குப் பெயர் வரி? வியாபாரி திருடுகிருன். பெயர் இலாபம்! கவிஞர் திருடுகின்றனர். பெயர் கையாளல்! ......ஏன் நீயே திருடியிருக்கிருய்... பெயர் காதல்"

"போதும் உங்கள் வியாக்யானம். அவள் உயர்குடியில் பிறந்தவள்"

"யாராயிருந்தால் என்ன? இருக்கும் இடம் சொல். இன்றிரவே நீ இங்கு அவளைச் சந்திக்கலாம்"

"அதுதான் முடியாது. தாங்கள் நினைப்பதுபோல் அது காட்டு மல்லியல்ல! பக்குவமாகக் கையாள வேண்டிய பாரிஜாதம்"

"இருக்கலாம். பறித்து வந்து காட்டுகிறேன் பார். இருக்கும் இடம் மட்டும் நீ சொல்......அது கூடத் தேவையில்லை. அடையாளம், சொல் போதும்"

"அவள் சேற்றில் முளைத்த செந்தாமரை அல்ல, சுலபத்தில் கொண்டுவந்துவிட, அவள் அரசிளங்குமரி"

"என்ன? அரசகுமாரியா...?"

"ஆமாம். அரசகுமாரியாவது இந்தக்கள்ளனைக்காதலிப்பதாவது என்றெண்ணுகின்றீர்களா? நம்ப முடியாததுதான். ஆனால் நடந்துள்ளது"

"ஆமாம்......அவள் எந்நாட்டு அரசகுமாரி?"

"ஏன்?...சிறைபிடித்துவரவா?"

"இல்லை இல்லை...சொல்..."

"வேழநாடு!"

"வேழநாட்டு இளவரசியா? உண்மையாகவா?......சொல்...... உண்மையாகவா?"

"ஏன் இந்தப் பதபதைப்பு? உண்மைதான் உண்மைதான்...... வேழநாட்டு மன்னன் மகள் தேன்மொழியேதான் என் காதலி. இன்றிரவுகூட அவளோடு இருந்துவிட்டுத்தான் வந்தேன்"

மார்த்தாண்டன் இடிகேட்ட நாகமானான். அதிகமான் வேழநாட்டு மன்னனின் மகன்! அவன் காதலிப்பது வேழநாட்டு மன்னனின் மகளை! அவன் தலை சுற்றியது.

"அதிகமான்......மறந்துவிடு அவளை"

"அதைவிட இறந்துவிடு என்று சொல்லுங்கள்"

"இல்லை. கட்டாயம் நீ அவளை மறக்கத்தான் வேண்டும்"

"முடியாத காரியத்தை முயற்சி செய்யச் சொல்லுகிறீர். நான் மட்டும்தான் அவளைக்காதலிக்கிறேன் என்றெண்ணுதீர், அவளும் நெஞ்சார என்னை நேசிக்கிருள். அவளுக்குத் தேவை அதிகமானின் காதல். இல்லாவிடில் அவனின் கட்டாரி"

"பிடிவாதம் வேண்டாம். நான் சொல்வதைக்கேள்"

"எங்களைப் பிரிக்கும் ஆற்றல் எவருக்குமே இடையாது"

"அதிகமான், அவள் அரச குமாரி என்பதற்காக உன்னை மறக்கச் சொல்லவில்லை. என் நெஞ்சில் புதைந்திருக்கும் பயங்கர இரகசியம் நீ அறியமாட்டாய்"

"பயங்கர இரகசியமா! என்ன அது?"

"அதைக் கேட்காதே. ஆனால் நீ அவளை மறக்கத்தான் வேண்டும்."

"என்ன அந்த இரகசியம்? அதைச் சொல்லுங்கள்."

"அது முடியாது.'

'சொல்லப்போகிறீரா இல்லையா?'

"முடியாது"

"வேண்டாம். ஆனால் நான் அவளைமணக்கப்போவது உறுதி"

"இல்லை... கூடாது..."

"தங்கள் பிடிவாதத்திற்குத் தகுந்த காரணம் இருக்கவேண்டும். சொல்லப்போகிறீர்களா இல்லையா"

"முடியாது, அதிகமான் முடியாது"

"முடியாது! தங்கள் பிடிவாதத்தால்தான் என் சந்தேகம் வலுக்கிறது. என் வாழ்வைப் பாதிக்கக் கூடிய இரகசியம் உங்களிடம் ஏதோ இருக்கிறது. என்ன அது? தொடர்ந்து என்னை உயிரோடு காணவேண்டுமென்று ஆசையிருந்தால் சீக்கிரம் சொல்லுங்கள். இதோ இந்த கட்டாரி என் உயிரைக் குடிக்குமுன் சொல்லுங்கள்... ஹும்"

"இறுத்து இறுத்து அதிகமான், சொல்லிவிடுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை"

"என்ன அது?"

"தற்கொலை செய்துகொள்ளவோ, அல்லது பிறரைக் கொலை செய்யவோமாட்டாய் என்று உறுதி சொல்"

"அப்படியொன்றும் செய்ய மாட்டேன்...சொல்லுங்கள்"

"நீ......நீ......"

"சொல்லுங்கள்......நான்"

"நீ...வேழ நாட்டு இளவரசன்"

"என்ன விளையாடுகிறீர்கள்?"

"விளையாட்டல்ல...உண்மையில் நீ வேழ நாட்டின் இளவரசன். சிறு வயதிலிருந்தே உன்னை அரண்மனையைவிட்டுக் கடத்தி வந்துவிட்டோம்."

"என்ன?..."

"ஆமாம் அதிகமான்! வேழ நாட்டின் வேந்தன் மகள் உன் தங்கை. அதனால்தான் சொல்கிறேன், நீ அவளை மறந்துவிடு"

"ஹா'........தேன்மொழி என் தங்கையா? நான் வேழ நாட்டு இளவரசனா? அடபாவிகளா! ஏன் இந்த அநியாயம் செய்தீர்கள்? நான் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தேன்?

என் தந்தை உங்களுக்கென்ன தீங்கிழைத்தார்?...... ஐயோ...... தங்கையின் வாழ்வையோ பாழ் செய்துவிட்டேனே. ஐயோ!...... இவ்வளவு பெரிய கொடுமை புரிந்துவிட்டேனே......" என்று கதறியவாறே அடித்துக்கொண்டு துடித்தான், பொங்கி வழிந்த கண்ணீர் அவன் மார்பை நனைத்தது. பித்தம் பிடித்தவன்போல் பிதற்றினான். பிஞ்சு உள்ளம்—கல்லடிபட்ட கண்ணாடிப் பாத்திரம் போலாயிற்று! வெறி பிடித்தவன் போல் பாறைகள்மீது மோதிக் கொண்டான். மார்த்தாண்டன் எவ்வளவு தடுத்தும் அவன் கேட்கவில்லை. உடைந்த உள்ளத்தோடு போராடிய அவன் நெஞ்சில் நடந்ததற்காகக் கழுவாய் தேடவேண்டுமென்று தோன்றியது. நெடுநேரத்திற்குப் பிறகு அவனையும் அறியாது அமைதியானான். ஆயினும் அவன் நெஞ்சில் தோன்றிய வெடிப்பின் சூடு தணியவில்லை.

"என்ன செய்வது? எங்கே போவது? தேன்மொழியின் கதி என்ன ஆவது? நான யாரென்று அவளறிந்தால் அவள் நிலை என்ன ஆவது?......ஐயோ........ அவளின் பிஞ்சு மனம் என்ன பாடு படும்?......அவளை யார் தேற்றுவது?......நடைபெற்றதற்குக் கழுவாய்தேட என்ன செய்வது?... தங்கையைத் தமையன் காதலிப்பதா? இந்தக் கொடுமைக்கு என்ன செய்வேன்?"—இப்படிப் பல போராட்டங்கள் எழுந்தன அவன் நெஞ்சில். கடைசியாகக் கண் காணாத இடத்திற்குப் போய்விடுவதென்ற முடிவிற்கு வந்தான். எழுந்தான். எதிரில் பயத்தோடு உட்கார்ந்திருக்கும் மார்த்தாண்டனைக் கண்டான்.

"என் வாழ்வைக் கெடுத்த புண்ணியவானே! நான் போகிறேன். தொலைதூரம் போகிறேன். என் தங்கையின் வாழ்வில் புயல் ஏற்படுத்திவிட்ட எனக்கு எங்கு போனாலும் அமைதி நிலவாது? இருந்தாலும் கண்காணாத இடத்திற்குப் போகிறேன். ஆனால் போகுமுன் உன்னிடம் இரண்டு கேட்டுக்கொள்கிறேன். ஒன்று, இந்தக்கள்ளர் கூட்டத்தைஉடனடியாகக் கலைத்துவிடு. மற்றொன்று, என் வாழ்வில் விளைந்த இந்த அவமானச் சேதியை உலகில் பிறர் அறியச் செய்யாதே..." என்றான் அதிகமான்.

"நீ எங்கும் போகாதே. நீ சொல்லிய இரண்டையும் நிறைவேற்று இன்றேன். உன்னை மீண்டும் உன் தங்கையிடம் கொண்டுபோய் விடுகிறேன்" என்றான், நீர்ததும்பும் கண்களோடு நின்றிருந்த மார்த்தாண்டன்.

"என் பயணத்தைத் தடுக்க உன்னால் முடியாது. அரசபோகம் எனக்குத் தேவையில்லை. இனி எனக்கு அது சுவைக்காது. என் தங்கையின் முகத்தில் விழிக்கமுடியாது. நான் சொல்லியவற்றைச் செய். அவைதான் நீ எனக்குச் செய்யக்கூடியவை... நான் போகிறேன்" என்று சொல்லியவாறே சென்றுவிட்டான் அதிகமான்.

அதிகமான் விட்டகன்றது முதல் மார்த்தாண்டன் குழம்பிப் போனான். பெற்ற பிள்ளையை இழந்துவிட்டதுபோன்ற உணர்ச்சி அவன் உடலை உலுக்கியது. அவன் கள்ளன்தான். என்றாலும் அவன் உடலும் இரத்தம்—சதைகளாலானதுதானே. குழம்பிக் குந்திக் கிடக்கும் தலைவனைப் பார்த்ததும் மற்றையவர்கள் மலைத்துவிட்டனர். காரணம் அறிய முயன்றனர். தான் தனியாக இருக்க விரும்புவதாகக் கூறித் தனித்த இடம் சென்றான்.

"கள்ளர் கூட்டத்தைக் கலைப்பதா? — இருபத்தைந்து ஆண்டுகளாக வேறு தொழில செய்யாது இதே தொழிலில் ஈடுபட்டோரை என்னவென்று சொல்லி போகச் சொல்வது? நமக்கோ வயதாகிவிட்டது. இந்தக் கூட்டத்திற்கு எவனைத் தலைவனாக ஆக்கவேண்டுமென்று விரும்பியிருந்தேனோ, அவனே போய்விட்டானே — இப்படி இரவு பகலாகப் பயந்துபயந்து கொள்ளையடித்துக்குவித்து என்ன செய்வது? நான் இறந்த பிறகு யார் இதை அனுபவிப்பது?...... வேழநாட்டு வேந்தனைப் பழிவாங்குவதற்காக அவன் மகனை எடுத்து வளர்த்தேன்... வளர்த்த பாசம் வயோதிகக் காலத்தில் வாட்டுகிறதே!..." இப்படிப் பல எண்ணங்கள் புற்றீசல் போல் கிளம்பின அவன் உள்ளத்திலிருந்து. இரவு முழுவதும் இந்த வேதனைகளால் துடித்துக்கொண்டிருந்தான். பொழுதும் விடிந்தது. அவனுக்கு அமைதி ஏற்படவில்லை. குழம்பிய மனதோடு உலாவிக்கொண்டிருந்தான். திடீரென்று ஒருவன் ஓடி வந்து "தலைவா... சிறையில் இருக்கும் ஊமை திடீரென்று பேசுகிறான்" என்றான.

"என்ன?... ஊமை பேசுகிறானா! ஆச்சரியமாயிருக்கே" என்றுசொல்லியவாறே சிறை நோக்கி நடந்தான் மார்த்தாண்டன் சிறைக் கதவைத் திறந்து உள்ளே நுழையும் போதே முனகல் சத்தம் கேட்டு வியந்தான்.

(தொடரும்)

4-ம் பக்கத் தொடர்ச்சி

அவருக்கு எதிரே அலமாரியில் தன் மகள் மல்லிகா வாங்கிவைத்திருந்த புத்தகங்கள் அழகாக அடுக்கப்பட்டிருந்தன. இதுவரையிலும் அவைகளைத் தொட்டுக்கூட அறியாத அவர், சென்று தொட்டுப்பார்த்தார். தன் கைக்குஅகப்பட்ட ஒரு புத்தகத்தை எடுத்துச் சில பக்கங்களைப் புரட்டினார். திருப்பி யார் எழுதியது அந்த நூல் என்று பார்த்தார். அதன் ஆசிரியர் பெயர் புத்தகத்தில் இருக்கத்தான் செய்தது. ஆனால் இவர் வாயில் நுழையவில்லை. யாராய் இருந்தால் என்ன என்றவராக மீண்டும் பக்கங்களைப் புரட்டினார். சில வரிகளில் கோடிடப்பட்டிருந்தன. அதில் அவர் நினைத்த கண்ணாடி என்ற சொற்கள் காணக்கிடந்தன. மெல்லப் படித்தார்.

இன்றைய சமுதாயம் எப்போதோ, என்ன காரணத்தாலோ, அப்போதைய தேவைக்கு ஏற்ப அமைத்துக்கொண்ட ஒரு அமைப்பையே கட்டித்தழுவி முத்தமிட்டுக் கொண்டு திரிகிறது. இது எப்படி இருக்கிறதுஎன்றால், கம்பன்காலத்திலே ரசம் பூசப்பட்ட கண்ணாடியை வைத்துக்கொண்டு இன்றைக்கும் முகம் பார்ப்பவனைப் போன்றிருக்கிறது என்று எழுதியிருந்தார்.

இப்பொழுது தன் இதயக் கதவுகளை யாரோ 'படீர் படீ'ரென்று திறந்துவிட்டதுபோன்று பட்டது. யார் அப்படித் திறந்தது? அவரை அறியாமலே அந்தக் கேள்வி எழுந்தது.

யாரா?

மல்லிகா! தன் மகள்... அவர் முறுவலித்தார்.

நேரே அறையைவிட்டு வெளியே வந்தார்.

"டிரைவர்... டிரைவர்..." என்று ஓங்கி அழைத்தார்.

வந்த டிரைவர், 'ஏனுங்க' என்றான்.

"காரை எடுத்துக்கொண்டு நேரே போய், இரண்டு பேரையும் உடனே அழைத்துவா!"

டிரைவருக்கு ஒன்றும் புரியவில்லை, "யாருங்க இரண்டு பேர்?"

"நம்ம பிள்ளைமையும், மாப்பிள்ளையையும்தாண்டா" சொல்லின் எழுச்சி புது வெள்ளம் புரண்டு வருவதுபோல் வந்தது. டிரைவர் சற்று நேரம் திகைத்து நின்றுவிட்டான்.

"ஆமாண்டா போடா... நான் நல்ல கண்ணாடியிலே முகம் பார்த்தேனடா, போடா" என்றார். அதட்டல்தான்; ஆனால்... மழையைக் கொண்டுவரும் காற்றாக அல்லவா இருக்கிறது.

டிரைவருக்கு இப்பொழுதுதான் புரிந்தது. "இதோ புறப்பட்டுட்டேங்க" என்று தெரு வாசலை நோக்கி ஓடினான். கேட்கவேண்டுமா? குணசிலரின் கார், காதலர்களை அழைத்துவரக் கடுவேகமாகப் பறந்துகொண்டிருந்தது. இவர் திரும்பிச் சென்று தன் அறைக்குள போய் அங்கிருந்த நிலைக் கண்ணாடியைத் தூசுபோகத் தானே துடைத்துவிட்டுத் தன்னையே ஒரு முறை நன்றாகப் பார்த்துக்கொண்டார். இப்பொழுது மான அவமானப் பிரச்சினையைப்பற்றிய எந்த வித சிந்தனையும் அவரிடமில்லை.

★

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.

சிந்தித்துப் பதில் சொல்வீர்!

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" —திருக்குறள்.

முயற்சியின் மாண்பினுக்குச் சிகரம் வைத்தாற்போல, உயிரினங்களே நடமாட நடுங்கிடும் பாலைவனத்தில் உலகத்து ஏழு அதிசயங்களுள் ஒன்றும் பிரமிடுகளை எழில்மிகு ஈகிப்து நாட்டினர் நிலைநாட்டினர்.

அக்குன்றனைய பிரமிடுகள் நிலையாக நின்று முயற்சியின் அருமை பெருமைகளை—வள்ளுவரின் வாய்மொழியை, இம்மாநிலத்து மக்களுக்குப் பறைசாற்றிக் கொண்டே இருக்கின்றன என்று சொல்லலா மல்லவா?

தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர் கடைசி தேதி: 9—8—60 } பயிற்சிகள் ஆரம்பம்: **11—8—60**

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்கு வரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும். சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு:— (1) சேர விருப்பமுடையவர் கல்வி நிலையத்திலிருந்து அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். (2) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (3) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப் படுவதால், ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (4) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பயிற்சி யளிக்கப்படும். (5) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விளக்கங்களையும் 8 நயா பைசா தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.